**செ. கு. எண்: 43** **நாள்: 08.03.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 8.3.2019</u>

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரம் மதுரா வெண்புருஷம் கிராமத்தைச் சேர்ந்த திரு. துரை என்பவரின் மகன் திரு. நாகராஜ் என்பவர் கட்டுமரத்தில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது, எதிர்பாராத விதமாக படகு கவிழ்ந்து, கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் – பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலையில், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சாலை விபத்தில் சேந்தநாடு கிராமத்தைச் சேர்ந்த திரு. காசிலிங்கம் என்பவரின் மகன் திரு. திருமுருகன், மாங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வடிவேல் என்பவரின் மகன் திரு. மண்ணாங்கட்டி மற்றும் ரசபுத்திரபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துக்கவுண்டர் என்பவரின் மகன் திரு. பாபு ஆகிய மூன்று நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், வெங்கம்பாக்கம் கிராமம், கிழக்கு கடற்கரை சாலையில் செய்யூர் வட்டம், நெற்குணப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு.பாபு என்பவரின் மனைவி திருமதி அமராவதி என்பவர் சென்னையிலிருந்து புதுச்சேரி நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு விபத்துக்களில் உயிரிழந்த 5 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நிகழ்வுகளில் **உயிரிழந்த 5 நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**